செ.வெ.எண்: 552 நாள்: 29.09.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**
**மாற்றுத்திறனாளிகளுக்கு தனியார் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் சமவாய்ப்பு கொள்கையினை செயல்படுத்துதல் தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் நல சட்டம் -2016 பிரிவு 51-கீழ் தனியார் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் சமவாய்ப்பு கொள்கையினை செயல்படுத்தி, மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு உருவாக்குதல், தடையற்ற சூழல் ஏற்படுத்துதல், சமவாய்ப்பு வழங்குதல் தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (29.09.2021) நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது;

புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படும் தனியார் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் சமவாய்ப்பு கொள்கையினை பதிவு செய்தல் தொடர்பாக சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அரசின் வழிகாட்டுதல் மற்றும் அறிவுரைகள் வழங்கப்பட்டு மாற்றுத்திறனாளிகளுக்கு 5 சதவீதம் வேலைவாய்ப்பு ஏற்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட தொழில்மைய பொது மேலாளர் எஸ்.திரிபுரசுந்தரி, துணை இயக்குநர் தொழிற்சாலைகள் பாதுகாப்பு எஸ்.மகேஸ்வரன், தொழிலாளர் உதவி ஆணையர் தங்கராஜு, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் எம்.மணிகண்டன், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் எஸ்.உலகநாதன் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**